‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் 1 லட்சம் வீடுகள் கட்ட ரூ.3500 கோடி!

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று முன்தினம் (14.3.2025) தமிழ்நாடு அரசின் 2025-2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தாக்கல் செய்தார். சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

நிதிநிலை அறிக்கை... முதல் பக்கத் தொடர்ச்சி

6. இந்த நூற்றாண்டுப் பயணம் வெற்றிகரமானது என நாம் பெருமிதம் கொள்வது எதிர்காலத்தில் தடைகளைத் தாண்டி வளர்ச்சியை நோக்கி, மேலும் எழுச்சியுடன் செல்ல வேண்டிய தேவையினைக் குறிக்கிறது.

எதிர்வரும் ஆண்டுகளில் நாம் மேற்கொள்ள விருக்கும் பயணத்தின் திசைகாட்டியாக முத்தமிழறிஞர் கலைஞர், கால் நூற்றாண்டுக்கு முன்னர் நிகழ்த்திய சாதனைகள் இரண்டினை இம்மாமன்ற உறுப்பினர்கள் வாயிலாக தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு நினைவுபடுத்திட நான் விழைகிறேன்.

அகில உலகமே புத்தாயிரமாவது ஆண்டுத் தொடக்கவிழாக் கொண்டாட்டங்களில் திளைத்திருந்த போது, வான்புகழ் வள்ளுவருக்கு குமரிமுனையில் வானுயரச் சிலை எடுத்திட்ட முத்தமிழறிஞர்கலைஞர், அதே ஆண்டு சென்னையில் டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்காவினையும் திறந்து வைத்ததன் மூலம் தமிழருக்கு ஒரு மகத்தான செய்தியினை உணர்த்திச் சென்றிருக்கிறார்.

“ததும்பும் தமிழ்ப்பெருமிதம் ஒருபுறம், உலகை வெல்லும் உயர் தொழில்நுட்பம் மறுபுறம்” என நமது எதிர்காலப் பயணம் அமைந்திட வேண்டும் எனக் குறிப்பால் உணர்த்தி, இன்று இம்மாமன்றத்தில் ஓவியமாய் உறைந்து நின்று நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கும் நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞருக்கு எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

7. கடந்து வந்த நூற்றாண்டுப் பயணத்தின் காலடித் தடங்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம், எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கான பாதையினை நாம் திட்டமிட வேண்டும். நாம் எதிர்கொள்ளவிருக்கும் சவால்களுக்கு, அறிவியல் வழிநின்று, தொழிற்நுட்பத்தின் துணைகொண்டு பகுத்தறிந்து தீர்வுகள் காண வேண்டும். தமிழ் நாட்டில் அதிவேகமாக வளர்ந்து வரும் நகரங்களின் வளர்ச்சி முறைப்படுத்தப்பட வேண்டும்.

புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, வேளாண் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் புதிய உயரங்களை அடைய முன் முயற்சிகள் தேவைப்படுகின்றன. செயற்கை நுண்ணறிவுயுகத்தில் இளைஞர்களின் தனித்திறன் மேம்பாடு உரிய கவனம் பெற வேண்டும்.

பெருமளவு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் தொழிற்சாலைகள் தமிழ்நாடெங்கும் பரவலாக உருவாகிட வேண்டும். நவீன கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட முனையும்போது, பசுமை ஆற்றல் வளங்களையும் முறையாகப் பயன்படுத்திட வேண்டும். வளர்ந்த நாடுகளுக்கு இணையான வளர்ச்சியை தமிழ்நாடு விரைந்து அடைந்திட விரிவான செயல்திட்டங்களை உடனடியாக நாம் உருவாக்கிட வேண்டிய வரலாற்றுத் தேவை தற்போது எழுந்துள்ளது.

பேரறிஞர் அண்ணாவின் தொலைநோக்குப் பார்வை!

8. எதிர்வரும் ஆண்டுகளில் நாம் மேற்கொள்ளவிருக்கும் பயணத்தின் முக்கிய நோக்கங்களை உள்வாங்கி, இந்த வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்கிட வழிகாட்டியாக அமைந்தவை பேரறிஞர் அண்ணாவின் தொலைநோக்குப் பார்வைதான். நிதியமைச்சராகவும் பொறுப்பு வகித்த பேரறிஞர் அண்ணா 1968-69 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்ட வாசகங்களை நினைவுகூர விழைகிறேன்.

“இன்றைய சமுதாயத்தில், அரசு ஆற்ற வேண்டிய பங்கு பற்றிய நமது எண்ணங்களில் ஏற்பட்ட கருத்துப் புரட்சிக்கிணங்க, சில ஆண்டுகளாகவே, வரவு-செலவுத் திட்டம், அரசின் வரவினங்களையும், செலவினங்களையும் குறிக்கும் வெறும் விவர அறிக்கையாக நிலவிய நிலை மாறிவிட்டது.

குடியாட்சியில் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் எய்துவதற்கு ஏற்ற வலிமை வாய்ந்த ஒரு கருவியாகவே, தற்கால வரவு-செலவுத் திட்டம் அமைகிறது”.

பேரறிஞர் அண்ணா வழிகாட்டிய திசையில் பயணித்து, இந்த வரவு-செலவுத் திட்டத்தை மக்கள் நலன் காத்திடும் கருவியாகப் பயன்படுத்தி, தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு வலுவான அடித்தளம் அமைக்க பெருமுயற்சி எடுத்திருக்கிறோம்.

தமிழ் மொழி வளர்ச்சி

9. **‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’** குமரி முனையில் ஆர்ப்பரிக்கும் அலைகளுக்கு நடுவே அமைதியின் திருவுருவாய் நிமிர்ந்து நின்று, தமிழ்ச் சமூகத்தை என்றென்றும் வழிநடத்தும் அய்யன் திருவள்ளுவரின் வானுயரச் சிலை எழுப்பப்பட்ட வெள்ளிவிழா ஆண்டினை தமிழ்கூறும் நல்லுலகம் அண்மையில் கொண்டாடி மகிழ்ந்தது.

திருவள்ளுவர் சிலையை பேரறிவுச் சிலை என அறிவித்த முதல்வர்

இத்தருணியில் கடலும் மலையும் உள்ளவரை நிலைத்து நிற்கும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்ட திருவள்ளுவரின் பெருஞ்சிலைக்கு **பேரறிவுச் சிலை** பெயரிட்டு அழைக்கலாம் என அறிவித்தவர் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

10. உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறள் உரைத்திடும் உன்னத வாழ்வியல் நெறிகளை உலகெங்கும் பரப்புவது நமது தலையாய கடமையாகும். காலம்தோறும் அறிஞர்களின் பெருமுயற்சியாலும், பல கல்வி நிறுவனங்களின் முன்னெடுப்பினாலும், இது வரை திருக்குறள் 28 இந்திய மொழிகளிலும் 35 உலக மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

2025-26
தமிழ்நாடு
நிதிநிலை அறிக்கை
எல்லார்க்கும் எல்லாம்
திருக்குறள்
THIRUKKURAL
மேலும்
45
உலக
மொழிகளில்
திருக்குறள்
Tirukkuṟaḷ
Tirukkuṟaḷ
Tirukkuṟaḷ